# நடேசன் கியூ. ஸி. மீண்டும் செனட்டரானுர்

Registered as a Newspaper in Ceylon ✱ ✱ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 328
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 10 ஹஜப். 22 வெள்ளிக்கிழமை [27-10-67]

## டாக்டர் லெனுேராவும் புதிய செனட்டர்

கொழும்பு, வியாழன்
திரு. எஸ். நடேசன் கியு. ஸி. மீண்டும் இன்று செனட்டரானுர். செனட்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து அச்சபையில் அங்கம் வகித்து வந்த செனட்டர் நடேசன் சென்ற மூன்றுவருட காலம் மட்டும் செனட்டில் அங்கம் வகிக்காமலிருந்தார்.

ஐந்து நியமன செனட்டர்களின் பதவிக்காலம் காலியானதைத் தொடர்ந்து அவர்களுக்குப் பதிலாக இன்று ஐவர் புதிய செனட்டர்களாக நியமிக்கப்பட்டனர். திரு. எஸ். நடேசன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு பிரதமர் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க செனட்டராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர்.

டாக்டர் எம். வி. பி. பீரிஸ், செனட்டர் எஸ். டி. எஸ். சோமரத்தின ஆகி

[6-ம் பக்கம் பார்க்க]


# 'யாழ். உற்பத்தியாளருக்கு இனி விடிவு ஏற்படும்'

## 'லக்சல' திறப்பு விழாவில் அமைச்சர் தஹநாயக்கா

யாழ்ப்பாணம், வெள்ளி
''தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து யாழ்ப்பாண மக்களின் தொழில்களை சிறப்புறச் செய்யவும் அதன் அபிவிருத்திக்காகவும் நாம் முயற்சி எடுத்து வருகின்றேும். இன்றைய நவநாகரீக உலகில் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மதிப்போ, பெருமையோ அளிக்கப்படுவதில்லை. இன்று ஆரம்பிக்கப்படும் 'லக்சல' மூலம் தான் இதற்கு நிச்சயமாக ஓர் விடிவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களையும் 'லக்சல' மூலம் வழங்குவதால் நமது கைத்தொழில்கள் நன்கு வளர்ச்சி அடைய முடியும். இதனுல் 'லக்சல' சிறு கைத்தொழில் அபிவிருத்திற்கு சிறந்த நிலையமாக அமையும்.''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட 'லக்சல' விற்பனை நிலையத்தை நேற்று திறந்து வைத்துப் பேசுகையில் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயகா தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் அமைச்சர் தகநாயக்கா, அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, குடிசைக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி



டைரக்டர் திரு. டி. சில்வா ஆகியோர் கொட்டடிச் சந்தியிலிருந்து மேளவாத்தியங்களுடன் 'லக்சல' வரை அழைத்துச் செல்லப்பட்டனர். யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. புள்ளைநாயகம், யாழ். மாவட்ட குடிசைக் கைத்தொழில் அதிகாரி திரு. கந்தவனம், கிராமசேவையார்கள் அலெக்ஸிஸ், ஜூலிஸ் ஆகியோர் மலர்மாலையிட்டு

[6-ம் பக்கம் பார்க்க]

## ரயிலில் நெரியுண்டு ஆசிரியர் மரணம்

சாவகச்சேரி, வியாழன்
பருத்தித்துறையைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் சிவரத்தினம்வல்லிபுரம் அல்லது ஆறுமுகம் என்பவர் நேற்று கொடிகாமத்தில் ரயிலில் நெரியுண்டு மரணமானுர்.

சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஜே. அருளானந்தம், திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கே. திரவியநாயகம் ஆகியோர் ஸ்தலத்தில் விசாரணை நடாத்தினர்.

ரயிலில் நெரியுண்டு இறந்தவரான சிவரததினம் வல்லிபுரம் என்பவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியரென்றும் 60 வயதுடைய அவருக்கு நான்கு பிள்ளைகளுண்டென்றும் விசாரணையின் போது தெரியவந்தது. விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி உபயோகம்

## 'சிங்கள சட்டத்தை பாதிக்கவில்லை'

### செனட்டில் மந்திரி

கொழும்பு, வியாழன்
தமிழ் மொழி விசேட விதிகள் மசோதா நிறைவேற்றப்பட்டதன் காரணமாக சிங்களம் ஒரே அரசகரும மொழியாகச் செயல்படமுடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் சிங்களம் ஒரே அரசகரும மொழியாக இயங்குவதற்கான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டுமென்றும் கூறி செனட்டர் தஸநாயகா இன்று செனட் சபையில் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இப்பிரேரணைக்கு உள்ளூர் ஆட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் பதிலளிக்கையில், சிங்களம் அரசகரும மொழியாக இருப்பதைத் தமிழ் மொழி உபயோகத்துக்கான விசேஷ விதிகள் சட்டம் பாதிக்கவில்லையென்றும் விளக்கிஞர். செனட்டர் தஸநாயகாவின் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

செனட்டர்றெஜி பெரேரா பேசுகையில், ராணுவமும், கடற்படையினரும் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருப்பதால் வெள்ளக் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு வெகுவாக உதவியிருக்கமுடியும் ஆனல் அரசாங்கம் அதைச் செய்யதவறிவிட்டதென்றுர்

வர்த்தகஅமைச்சர்டாக்டர் எம். வி. பி. பீரிஸ் பதிலளிக்கையில், இயற்கையின் கோளாறுகளுக்கு அரசாங்கம் எதுவும் செய்ய முடியாதென்றும், கூடியவரை நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சொன்னுர்.

## விமான நிலையத்தில் வரவேற்பு

காங்கேசன்துறை, வெள்ளி
நேற்றுக்காலை 8-45 மணிக்கு உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா விஷேச விமானமூலம் பலாலி விமான நிலயத்தை வந்தடைந்தார்.

இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த உள்நாட்டு அமைச்சரை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா முதலில் வரவேற்ருர். மயிலிட்டி இராமசபைத் தலைவர் திரு. எஸ். அருணுசலம்மலர்மாலை சூட்டி வரவேற்ருர்.

விமான நிலைய வாசலில் மாவிட்டபுரம் கோவில் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் சைவ சமய முறைப்படி சந்தனப் பொட்டிட்டு அமைச்சரை வரவேற்ருர்.

அமைச்சருடன் குடிசைக் கைத்தொழில் கிராம முன்னேற்ற சிறுகைத்தொழில் டைரக்ரர் திரு. டபிள்யு எச். பி. டி. சில்வா, உள்நாட்டு அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. டக்கன்டி அல்விஸ் ஆகியோர் அதே விமானத்தில் வந்தனர்.

2-ம் பக்கம் பார்க்க

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.
இன்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 162-வது சுவீப் முடிவுகள் பின் வருமாறு:-

1-வது பரிசு
19 R 0486 ரூபா 100,000

2-வது பரிசு
09 W 0701 ரூபா 40,000

3-வது பரிசு
36 C 0940 ரூபா 10,000

தலா 582 ரூபா 40 சதம் பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 37 F 0301 | 36 J 0528 |
| 09 T 0570 | 09 O 0614 |
| 36 V 0507 | 03 Q 0225 |
| 21 F 0864 | 06 L 0396 |

[6-ம் பக்கம் பார்க்க]

## சுங்கப்பகுதியினர் நடத்தும் ஏலவிற்பனை

காங்கேசன்துறை, வியா.
கள்ளக்கடத்தல் செய்யப்பட்டு கைப்பற்றப்பட்ட விலையுயர்ந்த சேலைகள் சுங்கப் பகுதியினரால் நேற்று ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் பீச் ரோட்டிலுள்ள சுங்க இலாகாக் காரியாலயத்தில் நடைபெற்ற இந்த ஏலவிற்பனவு பற்றிப் பொதுமக்களுக்கு அதிகம் தெரியாதிருந்ததால் குறிப்பிட்ட சிலரே இப்பொருட்களை வாங்கமுடிந்ததாகத் தெரியவருகிறது.

தொடர்ந்து இன்னும் மூன்று தினங்களுக்கு இந்த ஏலவிற்பனவு நடைபெறுமெனவும் 897 பட்டு கைத்தறிச் சேலைகள், [illegible] யான வேஷ்டிகள், 100 சாரங்கள் ஆகியன விற்பனை செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சதிவழக்கு விசாரணை

கொழும்பு, வியாழன்
இரண்டாவது சதிவழக்கு ஜனவரி மாதம் 10-ம் திகதி விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படுமென்று தெரிகின்றது.

தபாற்கந்தோர் தலைவர், தந்தியாளர் பரீட்சைக்குரிய மாதிரி வினுக்களுக்கு
5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உண்மையைக் கடைப்பிடிக்காமல் முன்னேற்றமடையமுடியாது. முன்னேற்றமும் சீர்திருத்தமும் அறநெறியோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ ஐப்பசிமீ 10௳ (27-10-67)


## உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்

'லக்ஸல' என்னும் உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனவு நிலையமொன்று யாழ்ப்பாணத்திலும் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையொன்று இதன்மூலம் நிறைவேறியிருக்கிறது. இந்த நிலையத்தைத் திறந்துவைத்த உள் நாட்டு அமைச்சர் திரு. தஹநாயகா, இந்த விற்பனவு நிலையத்தின் மூலம் சிறு கைத்தொழிலாளருக்குப் பேருதவியும், பொதுமக்களுக்கு நன்மையும் கிடைக்குமென்றும் கூறியிருந்தார். எந்த நோக்கத்துடன் இந்நிலையம திறக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்தில் வெற்றிபெறவேண்டும்.

சிறு தொழில்கள், குடிசைக் கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்கவேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்துவந்தபோதிலும் இக்கொள்கை சரியான முறையில் செயல்படவில்லை. உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களுக்கு நியாயமான விலைகொடுத்து வாங்குவதற்கும், உற்பத்தியான பொருள்களை உடனுக்குடன் உற்பத்தியாளர் விற்பனை செய்வதற்கும் சரியான வசதி செய்யப்படவில்லை. உற்பத்தியான பொருள்களை உடனுக்குடன் விற்க வசதி இல்லாததாலும், தரகர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதாலும் சிறு கைத்தொழிலாளர் கஷ்டமும் நஷ்டமும் அடைந்ததுடன் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபட முடியாமலுமிருந்தனர். இது தவிர சிறு கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமலும், நியாயமான விலையிலும் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதாக இல்லை. பொருள்கள் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்டும்கூட உற்பத்தியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித நன்மையும் கிடைக்கக்கூடியதாக இல்லை.

நேற்றுத் திறந்துவைக்கப்பட்ட இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனவு நிலையமான 'லக்ஸல' உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் பொருள்களை உடனுக்குடன் நியாயமான விலையில் வாங்கிப் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்கவேண்டும். இதன் மூலம் உற்பத்தியாளர் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடவும், உற்பத்திசெய்யப்படும் பொருள்களின் தரம் அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படும். யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் தென்னிலங்கையில் நியாயமான விலையில் கிடைக்கவும் தென்னிலங்கையில் உற்பத்தியாகும் பொருள்கள் இங்கு நியாயமான விலையில் கிடைக்கவும் இந்த நிலையம் பயன்படுமென எதிர்பார்க்கலாம். இந்த நிலையத்தின் மூலம் கிடைக்கும் நல்வாய்ப்பை சிறுதொழில், குடிசைக் கைத்தொழில் உற்பத்தியாளரும், பொதுமக்களும் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும். பொதுமக்களுக்கே இது பயன்படக்கூடியதாக இந்நிலையப் பொறுப்பாளர்களும் நடந்துகொள்வது அவசியம்.

# 'விவசாயப்படையில் தமிழ் வாலிபருக்கு ஆர்வமில்லை'

## ஜி. ஜி. கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி

''விவசாயப் படையில் சேருவதற்கு தமிழ் வாலிபர்களிடையே ஆர்வம் காணப்படவில்லை. சிங்கள வாலிபர்கள் தாங்களாகவே விரும்பி பெருமளவில் விவசாயப்படையில் சேரும்பொழுது தமிழ்வாலியர்கள் அக்கறை காட்டாதது பெரும் கவலைக்குரியது. பெற்ரோர்கள் தூண்டினலும் தமிழ் வாலிபர்கள் விவசாயப் படையில் சேர அவ்வளவு அக்கறை காட்டுகிருர்களில்லை. தமிழினத்தின் எதிர்காலத்தை மனதில் கொண்டு, தமிழ் வாலிபர்கள் விவசாயப் படையில் சேர முன்வர வேண்டும்.''

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி கிளைக் கூட்டத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எஸ். வன்னியசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: தமிழ் வாலிபர்கள் அரசாங்க உத்தியோகத்தில்தான் அக்கறை காட்டிவருகிருர்கள். இந்த நிலைமாறினல்தான் தமிழினத்திற்கு விமோசனமுண்டு. தமிழ் வாலிபர்கள் எல்லாரும் அரசாங்க உத்தியோகம் பெற்றுவிடமுடியாது.

தமிழ் வாலிபர்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒருவாறு தீர்க்கத்தான், யாழ்ப்பாணத்தில் கட்டடவேலை பயிற்சி நிலையம், மரவேலை பயிற்சி நிலையம் ட்ராக்டர் பயிற்சி நிலையம், ஆகியவற்றை அரசாங்கத்திடம் கூறி ஆரம்பிக்க முயற்சி எடுத்தேன். இப்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெறுவதில்கூட தமிழ் வாலிபர்கள் அக்கறை காட்டவில்லையெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் 5 ஏக்கர் நிலத்தில் 14 விதமான தொழிற்பயிற்சி நிலையமொன்றை நிறுவ முயற்சி எடுத்து வருகிறேன்.

வாலிப முன்னணிக் கிளையின் உத்தியோகத்தர்கள் தெரிவு விபரம் வருமாறு: தலைவர்- திரு. எஸ். வன்னியசிங்கம், செயலாளர்- திரு. கே. மகேந்திரராஜா, தனதிகாரி- திரு. எ. செல்வநாயகம். ——

## அலங்கார திருவிழா

கொம்பனித்தெரு, வியா.

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வருடந்தோறும் நடைபெற்று வரும் வருடாந்த கந்தசஷ்டி விழாவோடு தொடர்ந்து நடைபெற்று வரும் அலங்கார திருவிழாவை இம்முறை சிறப்பானமுறையில்செய்வதற்கு மேற்படி கோவில் நிர்வாகிகளானக. தியாகராசா. வி. கனகசபை ஆகியோர் ஒழுங்குகள் மேற்கொண்டு வருவதாகவும்கோவில்மண்டபத்தில் அலங்கார உற்சவம் நடைபெறும் தினங்களில் விசேஷ சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரிகளும் வெகு சிறப்பாக நடைபெற இருப்பதாகவும். பத்தாம் நாள் சிவசுப்பிரமணிய சுவாமி கொம்பனித்தெருவில் பல வீதிகள் வழியாகச் சென்று அடியார்களுக்கு காட்சிகொடுத்து அருளுவார் என்றும் மேற்படி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## சிங்களப்பரீட்சை

வெள்ளவத்தை, வியாழன்

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களப் பரீட்சைகள் இம்மாதம் 31-ம் திகதியும் நவம்பர் 8-ம்திகதியும் நாடு பூராவும் நடைபெற விருக்கின்றன. 31-ம் திகதி -3ம்8-ம் வகுப்புகளுக்காய பரீட்சைகளும் 8-ம்திகதி 5-ம்9-ம் வகுப்புகளுக்காய பரீட்சைகளும் நடைபெறவிருக்கின்றன.

——

## ''கோடீஸ்வரன் வழக்குக்கு நிதிஉதவிஅளியுங்கள்''

வெள்ளவத்தை, வியாழன்

''கோடீஸ்வரன் வழக்கு சம்பந்தமாகப் பழைய ஊழியர்கள், புதிதாகச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு காட்டாமல் தமிழ்அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவரது அப்பீல் வெற்றி பெறுவதற்காகப் பாடுபடவேண்டும். எனவே மறுக்கப்பட்ட நமது மொழியுரிமை திரும்பவும் கிடைக்கவேண்டுமானல் எம்மில் நிதி மிகுந்தவர் பொற்குவையும் நிதிகுறைந்தவர் வெள்ளிக்காசும் அள்ளித்தாருங்கள். அதுவுமற்றவர் இந்த நல்ல பணிக்கு ஊறுசெய்யாமலாவது இருங்கள்''

இவ்வாறு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கப்பொதுச் செயலாளக திரு. வெ. குமரகுரு கோடீஸ்வரன் வழக்கு நிதி சம்பந்தமாகக் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

## இன்றைய பலன்

[27-10-67]

வெள்ளிக்கிழமை

[ஐப்பசி மாதம் 10௳]

நட்சத்திரம்- ஆயிலியம் பி. இரவு 3-21 மேல் மகம்.

திதி- நவமி இரவு 11-51 மேல் தசமி.

சுபநேரம்-6-02 - 7-32.

ராகுகாலம்- 10-32—12-02.

மேஷம்- முயற்சியில் தளர்ச்சி முணுமுணுப்பு.

ரிஷிபம்- செய்தொழில் சிறப்பு, கனதனம் சேரும்.

மிதுனம்- கனக்கும் நெஞ்சம் கவலையின் தாக்குதல்.

கடகம்- சகோதர பாசம் ஆபத்தில் உதவி.

சிம்மம்- சொல்லிலே சுவை மறைந்துவிடும் பகை.

கன்னி- புதிரான வாழ்க்கை மாயத்தோற்றம்.

துலாம்- தாய் வழித் தனம் தக்க சமயத்தில் உதவும்.

விருச்கிகம்- பிள்ளைப் பாசம் கொள்ளை இன்பம்,

தனுசு- அரசபயம் ஆத்திரத்தை அடக்கு.

மகரம்-இதயப்பிணைப்பு இன்பப்பெருக்கு.

கும்பம்- சுயநலம் தலைதூக்கும் குரோதம் வளரும்.

மீனம்- தாம்பத்தியம் சிறக்கும் தாராள சிந்தை.

— சோதிட கலாநிதி —
திரு. வேலுப்பிள்ளை

கொழும்பு

## பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தடை

கொழும்பு, வியாழன்

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களை பல்கலைக்கழக வட்டாரத்துக்குள் நுழையாத வண்ணம் உபவேந்தர் திரு. ஐ. சி. விஜயசேகரா தடை விதித்துள்ளார்.

தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் ஜி.பி.மலலசேகரா பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுத்துள்ள கோரிக்கையொன்றில், மாணவர்களை அமைதியாக வகுப்புகளுக்குச் செல்லும்படியும், அவர்கள் கோரிக்கை சம்பந்தமாகப் பின்னர் நடவடிக்கை எடுப்பதாகவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

——

## விமான ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

## எம். பிக்கள்

விமான நிலையத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், நல்லூர் எம்.பி திரு.ஈ. எம். வி. நாகநாதன், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், செனட்டர் திரு. எஸ். நடராசா, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. கந்தையா, வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக், யாழ். மாவட்ட உயர்தர அதிகாரிகள் கிராமசேவகர்கள் ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஜி. டபிள்யூ லிபனகே, பலாலி தலைமைக்காரியாலய கமாண்டர் திரு. மொறிஸ் ஜெயவீர ஆகியோர் அமைச்சரை மரியாதை செலுத்தி வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அமைச்சர் கார் பவனியில் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

## நாட்டிலும் நகரிலும்

எகிப்திய பேரழகி, மஹாராணி கிளியோபாத்ரா என்ன விதமான கூந்தல் வளரும் தைலத்தை உபயோகித்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏதாவது தைலமா அல்லது நமது வர்த்தக ஒலிபரப்புச் சேவையார் மணி அடித்துக் கொண்டு அம்பலப்படுத்தும் ஏதாவது எண்ணெய் வகையராவா?

பல காலமாக இவருடைய மனதில் குடிபுகுந்து கொண்டிருந்த இந்த மர்மத்தை நேற்று யாழ்ப்பாணத்து'லக்சல'வைத் திறந்து வைத்த உள்நாட்டு அமைச்சர் டாக்டர் விஜயானந்த தஹநாயகா துலக்கி வைத்தார்.

யாழ்ப்பாணத்தில், நவாலியிலும், ஆனைக்கோட்டையிலும், பிராயம்பத்தையிலும் தயாரிக்கப்படும் அசல் நல்லெண்ணெயைத் தான் அந்த எகிப்திய மஹாராணி உபயோகித்தார் என்று டாக்டர் தஹநாயகா திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இச் செய்தியைக் கேட்டு நீங்கள் ஒருவரும் மூர்ச்சை போட்டு விழுந்து விடப்படாது. கனம் மந்திரியவர்கள் சும்மா'புருடா' அடிக்கிருர் என்றுநினைக்கப்படாது.

ஈழநாட்டிலிருந்து அராபிய நாடுகளுக்கு அரிசியும், மிளகும் கறுவாப்பட்டையும் வேறு பொருட்களும் முற்காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று சரித்திரம் கூறுகின்றது. ஆகையால் இப்பொருட்களில் யாழ்ப்பாணத்து நல்லெண்ணெயும் ஒன்ருய் இருந்திருக்கலாமல்லவா?

பனங்கொட்டையையும் நல்லெண்ணெயையும் எமது சில சகோதரர்கள் எள்ளி நகையாடிய காலம் போய் இன்று எமது தேசிய வாழ்வில் அவையும் ரப்பர், தேயிலை போல தேசியப் பொருட்களாகி விட்டன என்பதை மந்திரியவர்கள் உணர்த்தியுள்ளார்கள். உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் 'லக்சல'க்கள் மூலம் எமது நல்லெண்ணெய், பனம்பண்டம் முதலியன தென்னிலங்கைக்கும் அங்கு உற்பத்தியாகும் கித்துள் கட்டி, புற்பாய் முதலியன வட இலங்கைக்கும் பரிவர்த்தனை செய்வதன் மூலம் தேசிய ஒற்றுமை வளரும்.

ஃ ஃ ஃ

இ.போ.ச.பஸ் கொண்டக்டர் ஒருவர் வேலைவிட்டுப் போகும் போது தமது டிக்கட் புத்தகத்தை மறதியாக பஸ்ஸில் விட்டு விட்டுப் போய் விட்டார். அடுத்தபடியாக வேலைக்கு வந்த கொண்டக்டர் அதைக் கண்டெடுத்து ஒரு கடைக்காரரிடம் அடகு வைத்து விட்டார். இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் தான் டிக்கட் புத்தகம் கொடுக்கலாம் என்று கட்டளையிட்டு விட்டார்.

முதலாவது கொண்டக்டர், நாள் முடிவில் கணக்கு கொடுக்க வேண்டுமாதலால் ஊரெல்லாம் டிக்கட் புத்தகத்தைத் தேடித்திரிந்து, கடைசியாக அந்தக் கடையில் அது இருப்பதை அறிந்து, வேறொருவரிடம் கெஞ்சி மன்ருடி இருபத்தைந்து ரூபாய் வாங்கி அதை மீட்டுக் கொண்டாராம்!

சக ஊழியரிடையே எப்படி இருக்கிறது ஒத்துழைப்பு?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மே. ஆசியா விவகாரம்

# ‘தடை செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை தவிர்க்கவும்’

## அங்கத்துவ நாடுகளுக்கு பந்தோபஸ்துசபைகோரிக்கை

நியூயோர்க், ஒக். 26

**மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதித்த ஐ. நா. பந்தோபஸ்து சபை, ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. சோவியத் யூனியனும், அமெரிக்காவும் கொண்டுவந்த இரண்டு வெவ்வேறு தீர்மானங்களுக்குப் பதிலாக, இத்தீர்மானத்தைச் சபைத் தலைவர் பிரேரித்தார்.**

மேற்குஆசியாவில், தடை செய்யப்பட்டுள்ள எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் தவிர்த்துக்கொள்ளுமாறு இத்தீர்மானம் அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

### கண்டனம்

போர் ஒய்வு அத்துமீறல்கள் அனைத்தையும் கண்டித்த இத்தீர்மானம், ஐ. நா. போர் ஒய்வுக் கமிஷனுடன் ஒத்துழைக்குமாறு சகல அங்கத்துவ நாடுகளையும் கோரியது.

சூயஸ் கால்வாய்ப் பகுதியில், இரு தினங்களுக்கு முன் வெடித்த கடும் சண்டையை ஆரம்பித்தது இஸ்ரேலே என்று ஐ. அ. கு. வும், ஐ. அ. கு. வே என்று இஸ்ரேலும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொண்டன.

### தொடர்ந்து போராட்டம்

இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பகுதிகளை விடுவிக்கும்வரை, அரபு நாடுகள் தொடர்ந்து போராடும் என்று சிரியா தெரிவித்தது. கடந்த ஜூன் மாதத்துக்கு முன்னிருந்த நிலைகளுக்கு இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெறவேண்டுமென சோவியத் யூனியன் கேட்டுக்கொண்டது.

ஐ. நா. பிரகடனப்படுத்தும் எந்தப் போர் ஓய்வும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீடித்த சமாதானத்துக்கு வழி பிறக்கலாமென இஸ்ரேல் அறிவித்தது.

சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்றது.

### யூதாண்ட் அறிவிப்பு

சூயஸ் காலவாயில் நிறுத்தப்பட்டுள்ள ஐ. நா. பார்வையாளர் கோஷ்டியைப் பலப்படுத்துவதெனத் தாம் தீர்மானித்துள்ளதாக ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்ட் அறிவித்துள்ளார். இப்போதைய பார்வையாளர் தொகையை இரட்டிக்கப்போவதாக அவர் கூறினார். அத்துடன் பார்வையாளர் உபயோகத்துக்கென ஹெலிகொப்டர் விமானங்களும் தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### எண்ணெய் நிலையங்கள்

அண்மையில் நடைபெற்ற இஸ்ரேல்-ஐ. அ. கு. மோதலில், இஸ்ரேல் பீரங்கிகள் தாக்கியதன் விளைவாக சூயஸ் கால்வாய் அருகேயுள்ள ஐ. அ. கு. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இரண்டில், ஒன்று முற்றாக நாசமாக்கப்பட்டது. மற்றது பலத்த சேதத்துக்குள்ளாகியது. இதன் விளைவாக வெளிநாடுகளிலிருந்து பெட்ரோல் பெறவேண்டிய நிலை ஐ. அ. கு.வுக்கு ஏற்பட்டுள்ளது. ஐ. அ. கு. வின் எண்ணெய் சப்ளையில் முக்கால்பங்கினையும் இவ்விரண்டு நிலையங்களுமே உற்பத்தி செய்துவந்தன.

இச்சண்டையில், 11 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும், 92 பேர் காயமுற்றதாகவும் ஐ. அ. கு. அறிவித்துள்ளது.

## உ. பி. அரசியல் பிரச்னை தீர்ந்தது

லக்னோ, ஒக். 26

உத்தரப்பிரதேசஅரசியல் நெருக்கடி தீர்க்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட். சம்யுக்த சோஷலிஸ்ட் மந்திரிகள், உ. பி. ஆளுங்கட்சியிலிருந்து ராஜினமாச் செய்ததால் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி, உ. பி. முதல் மந்திரி திரு. சரண்சிங்கின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால், தீர்க்கப்பட்டு விட்டது.

சம்யுக்தசோஷலிஸ்ட் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க, ரூ. 2 உச்சவரம்புள்ள சகல நில வரிகளையும் ரத்துச் செய்வதாக முதல் மந்திரி உறுதியளித்துள்ளார்.

# ‘வியட்னும் பிரச்னையை ஐ. நா. விடம் பாரப்படுத்துக’

## அமெரிக்க செனட்டர்கள் கோரிக்கை

வாஷிங்டன், ஒக். 26

வியட்னும் பிரச்னையை ஐ, நா. பந்தோபஸ்து சபைக்குப் பாரப்படுத்துமாறு அமெரிக்க ஜனபதி திரு. ஜோன்சனைக் கோரும் ஒரு மகஜரை, அமெரிக்க செனட்சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டு அவரிடம் அனுப்பி வைத்துள்ளனர்.

### எழுத்தாளர் மறுப்பு

வியட்னும் போருக்கான செலவுக்காக, அதிக வருமானவரி செலுத்தத் தம்மால் முடியாதென அமெரிக்க எழுத்தாளர்கள் 300 பேர் மறுத்துள்ளனர்.

# இலங்கை - இந்தியாவுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு

## கோபல்லாவ வேண்டுகோள்

புதுடில்லி, ஒக், 26

இலங்கையும் இந்தியாவும், பொருளாதாரத்துறையில் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமெனத் தற்போது இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ, இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயினுக்குத் தாம் அளித்த விருந்துபசாரமொன்றில், கேட்டுக்கொண்டார்.

இலங்கை, இந்தியா போன்றநாடுகளுக்கிடையே போதிய பொருளாதார ஒத்துழைப்பு இல்லாததன் காரணமாகவே, அந்நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் இறங்கியுள்ளதாகத் திரு. கோபல்லாவ கூறினர்.

### பொருளாதார சுதந்திரம்

பொருளாதார சுதந்திரம் கிடைத்தால் தான், ஜனநாயகத்தின் உண்மையான அர்த்தம் விளங்குமெனத் திரு. கோபல்லாவ கூறினர். தமக்கிடையே உலகின் தேயிலை உற்பத்தியில் 85சதவீதம் உற்பத்தி செய்யும் இலங்கையும், இந்தியாவும் ஒன்று சேர்ந்து, தேயிலை விலையின் உத்தரவாதத்தை உறுதிப்படுத்த முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

திரு, கோபல்லாவின் பேச்சுக்குப் பதிலளிக்கையில், இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் ஒன்றையொன்று அனுதாபத்துடன் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும், பொருளாதார மற்றும் துறைகளில் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் வலியுறுத்தினர்.

### உலகுக்கும் நன்மை

இவ்விதம் இவ்விருநாடுகளும் ஒத்துழைப்பது, அவற்றுக்கு மட்டுமன்றி, பொதுவாக உலகுக்கே நன்மையளிப்பதாக இருக்கும் என்று ராஷ்டிரபதி மேலும் குறிப்பிட்டார்.

## விண்வெளியில் சீன உபகிரகம்?

வாஷிங்டன், ஒக். 26

அடுத்த ஜனவரிக்குள் ஒரு உப - கிரகத்தைச் சீன விண்வெளிக்கு அனுப்பும் என்று இரகசிய வட்டாரங்கள் கூறியதாக வானவெளி ஆராய்ச்சிபற்றிய அமெரிக்க சட்டசபை நிபுணர் தெரிவித்துள்ளார்.

முதல் அணுசக்தி ரொக்கெட்டைத் தயாரிக்கும் வேலையைச் சீன விரைவில் பூர்த்தி செய்யும் என்று அந்த உயர்தரவட்டாரங்கள்கூறியதாகப் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் ஜேம்ஸ்புல்டன் மேலும் தெரிவித்தார்.

பீகிங்கிலுள்ள சீன பௌதிக கழகத்தில் ரொக்கெட் வேலை நடப்பதாக அவர் நிருபர்களிடம் கூறினர்.

ரொக்கெட் உப கிரக திட்டத்தின் இருடைரக்டர்களில் ஒருவர், ரஷ்யாவில் பயிற்சி பெற்ற சீன விஞ்ஞானியாவர்.

“ஆசிரியர்கள்

# தனிப்பட்ட கல்வி போதனையில்ஈடுபடக்கூடாது”

புன்னலைக்கட்டுவன், வியா

அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் பணவருவாயின் பொருட்டு தனிப்பட்ட முறையில் கல்வி போதிக்கக் கூடாதென்றும், திணைக்களத்தின்அங்கீகாரம் பெருத எந்த வர்த்தக ஸ்தாபனங்களிலும் அங்கத்துவம் வகிக்கக் கூடாதென்றும் 1965-ம் ஆண்டு கல்வியமைச்சுவெளியிட்ட சுற்றறிக்கையை வடமாநில கல்வியதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் இவ்வாரம் மீண்டும் ஆசிரியர் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளார். ஓர் ஆசிரியர் முழுநேர அரசாங்க உத்தியோகத்தரென்ற அடிப்படையிலேயே சம்பளம் பெறுவதால், தனிப்பட்ட கல்விப் போதனையில் அவர் ஈடுபடக் கூடாதென இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பம்பாய் கொலை இருவர் கைது

பம்பாய், ஒக். 26

பம்பாயில் ஒரு வர்த்தகரும், மற்றும் அவரது மனைவி, பேரன், வேலைக்காரி ஆகிய மூவரும் ஒட்டுமொத்தமாகக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர் அல்லவா? இராணுவத்திலிருந்து ‘டிமிக்கி’ கொடுத்த ஒருவரும், ஒரு மோட்டார் டிரைவரும் இது சம்பந்தமாகப் பம்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

“பம்பாய்பொலிசின் சரித்திரத்திலேயே மிகக் கொடூரமான” இந்தக் கொலை நிகழ்ந்த 48 மணி நேரத்துக்குள், இவர்கள் கைது செய்யப்பட்டு விட்டனர் என்று ஒரு பெரிய பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்,

கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் இக் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், சந்தேக நபர்களிடமிருந்து ரூ. 10,000 மதிப்புள்ள நகைகளும் ரொக்கமும் மீட்கப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தியா

## உப-ராஷ்ரபதி மகன் திருமணம்

பங்களூர் ஒக். 26

இந்திய உப-ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரியின் மகன் திரு. இமாசரன் கிரிக்கு, அவருடைய பங்களூர் இல்லத்தில்திருமணம் நடந்தது.

மைசூர் கவர்னர் திரு. ஜி. எஸ். பாடக், முதல் மந்திரி திரு. நிஜலிங்கப்பா, மற்றும் மந்திரிகள், பிரமுகர்கள் மாலை வரவேற்புக்கு வந்திருந்தனர்.

ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின், முன்னுள் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், மத்திய மந்திரிகள், மற்றும் நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

## வாந்தி பேதியால் 25பேர் மரணம்

### அசுத்தக் கிணறு காரணத்தால்

பங்களூர். ஒக்26

வட மைசூரில் உள்ள ஒரு கிராமத்தில், வாந்தி பேதியினுல் 25பேர் உயிரிழந்துள்ளனர். 60 பேரின் உடல் நிலை மோசமாயுள்ளது.

அசுத்தப் படுத்தப்பட்ட ஒரு கிணறே, இந்தவாந்தி பேதிக்குக்காரணம் எனக் கூறப்படுகிறது.

இறந்தவர்களில், நால்வரடங்கிய ஒரு குடும்பமும் இருந்தது,

## 300 பேர் கைது

கல்கத்தா, ஒக். 26

மேற்கு வங்காளத்தில், ரயில் மூலம் அரிசி கடத்திய குற்றத்துக்காக, 300 பேர் கைதாகியுள்ளனர்.

## இந்திய-பாகிஸ்தான் இராணுவ தளபதிகள் பேச்சுவார்த்தைகள் முடிந்தன

ராவல்பிண்டி, ஒக். 26

இங்கு கூடிய இந்திய, பாகிஸ்தானிய இராணுவத் தளபதிகள் இருவரும், தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டுள்ளனர்.

இந்திய-பாகிஸ்தான் எல்லை, காஷ்மீரிலுள்ள போர் ஒய்வுக்கோடு ஆகியன பற்றி இரு தளபதிகளும் விவாதித்தனர்.

ஓர் இணைப்பறிக்கை, ராவல்பிண்டியிலிருந்தும் புதுடில்லியிலிருந்தும் ஒரே நேரத்தில், இன்று மாலை வெளியிடப்படும்.

## ரொடீஷியாவுக்கு தடை நடவடிக்கை

நியூயோர்க், ஒக் 26

ஐ. நா. உத்தரவாதக்கமிட்டியில், ரொடீஷியாவுக் கெதிராகத் தடை நடவடிக்கை எடுக்குமாறு ஐ. நா. பந்தோபஸ்து சபையை 41அங்கத்துவநாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

ரொடிஷியாவில் ஆட்சி நடத்தும் வெள்ளையரின் சிறுபான்மைஅரசாங்கம்சட்டவிரோதமான தானபோதும் அதற்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எதையும் எடுக்கத்தவறி விட்டதாகவும் அந்நாடுகள் குறை கூறின.

## உலக தமிழாராய்ச்சி மகாநாடு

### தருமபுர ஆதீனம் நன்கொடை

சிதம்பரம், ஒக்26.

அடுத்த வருட ஆரம்பத்தில். சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்குத் தரும புர ஆதீனம் ரூ 30 ஆயிரம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

அண்மையில், தமிழக கல்வி, அற நிலைய மந்திரி திரு. நெடுஞ்செழியன், ஆதினத்துக்கு விஜயம் செய்தபோது ஆதீனத்தின் 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமராசா சுவாமிகள், மந்திரி கரியம் இத் தொகையை வழங்கினர்.

## வீதி விஸ்தரிப்பு

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி பிரதான வீதி பொதுமராமத்துப் பகுதியினரால் விஸ்தரிக்கப்பட்டுச்சீர்திருத்தப் பட்டுள்ளது. வீதியின் அருகில் குழாய் வடிகால்கள் குழிதோண்டிப்புதைக்கப் பட்டு வருகின்றன. இதனுல் மழை காலங்களில் கரவெட்டி, நெல்லியடிப் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்காது ஒடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

சில்லாலை மாதர் முன்னேற்றச்சங்க முன்றலில் இலங்கை தகவல் பகுதியினரால் ஓர் இலவச படக்காட்சி இன்று 6மணிக்கு காண்பிக்கப்படவிருக்கிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரலி குமாஸ்தாக்கள் முறையீடு

யாழ்ப்பாணம், வியா. வடபகுதி துறைமுகங்களுக்கு கடந்த இரு மாதங்களாக வெளிநாடுகளிலிருந்து பொருட்களை ஏற்றிவரும் கப்பல்கள் ஒன்றுமே வராததால்தாம் உழைப்பின்றித் தவித்துக்கொண்டிருப்பதாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் வடபகுதி ரலி குமாஸ்த்தாக்கள் சங்கத்தினர் முறையிட்டனர்.

விரைவில் வடக்குக்கு கப்பல்கள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி சங்கத்தினர் திரு. ஜி. ஜி. யை வற்புறுத்தினர். தாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக திரு. பொன்னம்பலம் அவர்களிடம் உறுதியளித்தார்.

## குறை தீர்க்கப்படும்

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் உப தபால் கந்தோர் கருமங்கள் சம்பந்தமான குறைபாடுகள் கொண்ட மகஜர் தபால் மா அதிபர் உட்பட மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவ்வூர் பொதுமக்களால் அனுப்பிவைக்கப்பட்டன. குறைபாடுகளை உடன் நீக்க நடவடிக்கை எடுப்பதாக பதில் அனுப்பப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 27-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 பண்ணாரிந் தமிழ், 8-15இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 பஜனை — இராமகிருஷ்ண மடத்திலிருந்து அஞ்சல், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-35 பாட்டு — பி. பாலசிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 9-45 தேர்ந்த இசை.

## பாடசாலைகளில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்

ஊர்காவற்றுறை, வியாழன்

''மாணவர்கள் மத்தியில் உணவு உற்பத்திப்பெருக்கத்தின் அவசியத்தை உணர்த்துவதற்கு தீவுப்பகுதிப் பாடசாலைகளில் முன் மாதிரியாக உணவுப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும்'' என்று தீவுப் பகுதி தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டில் உரை நிகழ்த்திய தீவுப்பகுதி வித்தியாதரிசி திரு. சீமாம்பிள்ளை மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

## கந்தபுராண படிப்பு

அச்சுவேலி, வியாழன்

பத்தைமேனி மிட்டிலங்கூடல் பிள்ளையார் கோவிலில் கந்தபுராணம் படிக்கப்பட்டு வருகின்றது. கந்தசட்டியை முன்னிட்டு சூரன் போர் படிப்பும் இடம் பெறும்.

## அச்சுவேலி தமிழரசுக்கிளை கோரிக்கை

அச்சுவேலி, புதன்

காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்ற அச்சுவேலி வளலாய் பஸ் சேவையை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும்படி அச்சுவேலி தமிழரசுக்கிளை கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையிடம் கோரியுள்ளது.

இச்சேவை நடைபெறுமேயானால் மாணவர்களும் காரியாலயங்களுக்குச் செல்பவர்களும் பெரும் பயனடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி, வியா.

சென்ற வருடம் இந்து ஆலோசனைச் சபைக்கு 20,000 ரூபாவாக வழங்கிய மான்யத்தை முன்பு வழங்கியதுபோல் 50,000 ரூபாவாக வழங்கவேண்டுமெனக் கோரும் மகஜரொன்றை கைதடி இந்து வாலிபர்சங்கம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளது.

## ஓய்வு பெறுவார்

புன்னாலைக்கட்டுவன், வியா.

உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சி. ரீ. நவரத்தினம் ஓய்வுபெறவிருக்கிறார். 37 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றிய இவர், சமய, சமூகப்பணிகளில் பெரிதும் ஈடுபட்டிருந்தார்.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

1967 நவம்பர் 2-ந் திகதி 166வது சீட்டிழுப்பு அம்பலாங்கொடையில் நடைபெறும்.



**1-வது பரிசு ரூ. 100, 000/-**

அல்லது புத்தம் புதிய வோக்ஸ் வகன் 1600 ஸ்டேசன் வகனும் ரூ. 82, 700/- ரொக்கமும் ★



**2-வது பரிசு ரூ. 40, 000/-**

அல்லது புத்தம் புதிய இஜுசுபெலட் காரும் ரூ. 28, 250/- ரொக்கமும் ★



**3-வது பரிசு ரூ. 10, 000/-**

அல்லது புத்தம் புதிய டிராக்டர் (மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போட்டர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன்) கம்பெனி பட்டியல் விலைரூ. 14,000/- வாகியஇந்த ட்ராக்டர் விசேஷமாக குறைக்கப்பட்ட விலை ரூ. 10,000/க்கு வழங்கப்படுகின்றது.
(அடுத்த கப்பற் பண்டங்கள் வந்தபின்பே, பரிசு பெற்றவருக்கு டிராக்டர்வழங்கப்படும்)

★ இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்கு குறைந்ததாகும்.

**100 ஆறுதல் பரிசுகள்:**

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1562-60 பரிசு பெற்றுர்கள்.

இந்தக் கார்களையும், ட்ராக்டர்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

## 50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீபாவளிப் பண்டிகையை**

முன்னிட்டு
நைலோன் சேட்டுகள்
நைலோன் புஸ் சேட்டுகள்
ஹொட்டன் சேட்டுகள்
பெண்பிள்ளைகளுக்குரிய
நைலோன் ஹவுன்கள்
ஹொட்டன் ஹவுன்கள்
மற்றும்
வயில் சேலைகள்
கைத்தறி சேலைகள், வேஷ்டிகள்
இன்னும்
பல ஜவுளி வகைகளும்
மிகவும் மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

**சிவரூம்ஸ்**

12, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்)


## விளம்பரம்

**பட்டினசபை**
**வல்வெட்டித்துறை**
**ஒப்பந்த வேலை**
**விண்ணப்ப விளம்பரம்**

1. வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவரால் பொலிகண்டியில் உள்ள சபைக்குரிய நிலத்தில் ஆறு அறைகள் கொண்ட கூலியாட்கள் வீடுகட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் கார்த்திகை மாதம் 15-ம் திகதி [15-11-67] புதன்கிழமை முற்பகல் 10-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 26-10-67-ம் திகதி தொடக்கம் 14-11-67-ம் திகதி பிற்பகல் 2-00 மணிவரையும் பட்டினசபைக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் அரசாங்க காரியாலயங்களில் இருந்தோ அல்லது உள்ளூராட்சிமன்றங்களிலிருந்தோ ஒப்பந்தக்காரர்களாகப் பதிவுசெய்யப்பட்டவர்களென்ற அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தல்வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளமுன்பு கேள்விப் பத்திரங்களுக்கு நன்நம்பிக்கைப் பணமாக ரூபா 500/-ம் கேள்விப்பத்திரங்களுக்குரிய பணமாக ரூபா 25-ம் செலுத்திப்பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரங்களுக்குக் கட்டிய தொகை திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியுடன் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிட்ட உறைகளில் இடதுபக்க மேல் மூலையில் "கூலியாட்கள் வீடுகட்டுவதற்கான கேள்வி விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேராகக்கொண்டு வந்தோ இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி விண்ணப்பப்பெட்டியில் போடப்படல்வேண்டும்.

6. எந்த அல்லது எல்லா விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் உரிமையும் ஒரு விண்ணப்பத்தின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையும் பட்டினசபைத் தலைவருக்கு உண்டு.

இன்னும் தேவையான விபரங்களைச் செயலாளரிடமிருந்து கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பட்டினசபை,
வல்வெட்டித்துறை.

பட்டினசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
21-11-67. 301

## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

பழை, தெல்லிப்பழை சின்னத்தம்பி தையப்பிள்ளையின் மரண வைபவத்தில் கலந்துகொண்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் உதவிகள் செய்தவர்களுக்கும் மக்கள் இராசையா, சிங்கராசா, கந்தையா, இராசம்மா, அன்னமுத்து, அன்னலட்சுமி, மருமக்கள் முத்துத்தம்பி, திருச்செல்வம் இதயபூர்வமான நன்றியறிவித்தலைத் தெரிவித்துக் கொள்கிறோம். 2279

### விற்பனைக்கு

மணம், குணம் நிறைந்த ... கொண்டு. S. சின்னத்துரை, No 62, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். 228[illegible]

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

**நவம்பம் 15-ம்திகதி நடைபெறவிருக்கும் தபால் கந்தோர் தந்தியாளர் பரீட்சைக்கு உதவும் மாதிரி வினு விடைகள்**

### வினுக்கள்

1. எதியோப்பியாவின் (ETHIOPIA) சக்கரவர்த்தி பெயர் என்ன?
2. உலகின் முதலாவது விண்வெளி வீரன் யார்? எத்தேசத்தவர்?
3. இலங்கையின் தொல்பொருட்பகுதி ஆணையாளர் யார்?
4. இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் அதிபதியாக (Director) இருப்பவர் யார்:
5. சர்வதேச பத்திரிகை நிலையத்தின் (I. P. I.) தலைவராக இருப்பவர் யார்?
6. ''செல்வி கிறிஸ்டீன் கீலர்'' விவகாரம் எந்நாட்டுடன் தொடர்புகொண்டது? அதுபோழ்து அந்நாட்டை ஆட்சி செய்த கட்சி யாது?
7. தென் கோரியாவின் முதலாவது ஜனதிபதியாக இருந்து ஹொனெலுலு (Honolulu) வில் இறந்தவர் யார்?
8. இலங்கை அரச விமானப்படைத் தளபதி யார்?
9. ஜனதிபதி ஜோன் கென்னடியை சுட்டவர் யார்?
10. சூரியன் ஒரு நட்சத்திரமா அல்லது கிரகமா?
11. இவ்வருடம் மார்ச் மாதம் கிங்ஸ்ரனில் இறந்த உலகப்பிரசித்தி பெற்ற கிரிக்கெட் விளையாட்டுவீரன் யார்?
12. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஹிட்லருடன் ஒத்துழைத்த இத்தாலிய சக்கரவர்த்தி யார்?
13. இலங்கையில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தூதுவராக கடமை ஆற்றுபவர் யார்?
14. எலிசபெத் மகாராணியை வரவேற்ற கொழும்பு நகராதிபதி யார்?
15. 13-5-1967-ல் தனது 95-வது வயது நிரம்பப்பெற்ற ஆங்கில தத்துவஞானியும் கணிதமேதையும் யார்?

(விடைகள் 6-ம் பக்கம்)

### விற்பனைக்கு

உங்கள் தீபாபலி பண்டிகையை முன்னிட்டு சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட எல்லாவகையான உடுப்புகளும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். வேவறிட் தையல் நிலையம், (டயரும்ஸ் முன்னல்), 61, மெயின்வீதி, யாழ்ப்பாணம். 2278

### வைத்தியம்

சகலவித முறிவு வைத்தியங்கட்கும், வாதம், தொய்வு, சிரங்கு, தலைமுடி உதிர்தல், சிறுபிள்ளைகளின் சகல நோய்கட்கும் பலவருடங்கள் அனுபவம்பெற்ற வைத்தியரால் சிறந்தமுறையிலும், பெண் மணிகளுக்கு பெண் வைத்தியரால் சிகிச்சை அளிக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆயுள்வேத வைத்தியசாலை, நாயன்மார்கட்டு, 160, ஆஸ்பத்திரி வீதி, ராஜா கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம். 2276

### காலமானுர்

மன்னர், வியாழன் 'ஈழநாடு' மன்னர் பகுதி நிருபர் திரு. கார்த்திகேசு காலமாகிவிட்டார். அன்னரது ஈமைக்கிரிகைகளில் பெரியார்களும், உறவினர்களும் கலந்து கொண்டுசிறப்பித்தனர்.

வெள்ளவத்தை, வெள்ளி இலங்கை சாகித்திய மண்டலத்தின் இக்காலத் தமிழ் கவிதைக் குழு நடாத்தும் ஐந்தாவது வியரங்கும் பா ஓதலும் நாளை கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. க. அமிர்தநாயகம் தலைமையில் இக் கவியரங்கும் நடைபெறும்.


# மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு

குறுக்ஸ் B. 2 லென்ஸ்
**சன்கிளாஸ்**
மலிவு விலை ரூபா 27-50 சதம்
ஆண்கள் பெண்களுக்கு
பல்கட்டும் கண்ணுடி } வேலைகளா
10 வீதம் கழிவு
25-10-67 தொடக்கம் 31-12-67 வரை

மூக்கு கண்ணுடிகள் லேட்டஸ் பிரேம்களில்

**P. I. பேர்ணன்டோ**

பல்கட்டுபவர், கண் பரிசோதகர்.
51. A. பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உணவில்

# தமிழகம் அடைந்துள்ள மகத்தான வெற்றி

## செஸ்டர் பவல்ஸ் பாராட்டு

சென்னை, அக். 26

உணவு உற்பத்தியில் தமிழகம் அடைந்துள்ள மகத்தான புரட்சிகர வெற்றி பாரதத்தின் உணவு தன்னிறைவுக்கே வழிகோலக் கூடுமென்று இந்தியா வந்துள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. செஸ்டர் பவல்ஸ் கூறியிருக்கின்றார்.

உதகமண்டலத்தில் நவடபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. பவல்ஸ் பேசினார்.

தமிழகம் உணவு உற்பத்தியில் அடைந்துள்ள மகத்தான புரட்சியை மற்ற ராஜ்யங்களும் பின்பற்றினால் வெகு விரைவில் இந்தியா உணவில் தன்னிறைவு அடைந்துவிட முடியுமென்று அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழக முதன் மந்திரி திரு. அண்ணாதுரை பேசியபோது, அமெரிக்க மக்கள் தளராத முயற்சி உடையவர்கள் என்றும் அந்த மக்களை இந்திய மக்களும் பின்பற்றலாமென்றும் குறிப்பிட்டார். உணவு உற்பத்தி அபிருத்திக்கு அமெரிக்கா கொடுத்துவரும் ஆதரவுக்கு முதன் மந்திரி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# 'மரவரி முறையில் மாற்றம் ஏற்படாது'

## அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மரவரி முறையில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாதென நேற்றைய தினம் தம்மைச் சந்தித்த வடபகுதி கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத் தூது கோஷ்டியினருக்கு, உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா தெரிவித்தார்.

முன்னாள் செனட்டர் திரு. ஜீ. நல்லையா தலைமையில் சிறுபான்மைத் தமிழர் முன்னணியும், வடஇலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கமும் கூட்டாகச் சேர்ந்து நேற்றுக் காலை காங்கேசன் துறை விருந்தினர் விடுதியில் டாக்டர் தகநாயக்காவைச் சந்தித்தனர். இத்தூது கோஷ்டியில் 5 பேர் அங்கம் வகித்தனர்.

டாக்டர் தகநாயக்காவிடம் இரு சங்கங்களின் சார்பில் மகஜர் ஒன்று திரு. நல்லையாவினால் கையளிக்கப்பட்டது. சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின் பிரகாரம் வடபகுதி சிறுபான்மைத் தமிழர்கள் அமைதியான முறையில் தேநீர்க்கடைப் பிரவேசம் ஆலயப் பிரவேசம் ஆகியவற்றைச் செய்த போதிலும் கடை நிர்வாகிகளே தம் மீது பலாத்காரம் பிரயோகிப்பதனால், இச் சட்டத்தைப் பலப்படுத்த வேண்டுமென இம் மகஜரில் கோரப்பட்டுள்ளது. [ந. நி]

# தேசிய சுவீப்...

1- பக்கத் தொடர்ச்சி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | K | 0880 | 22 | D | 0221 |
| 03 | X | 0036 | 36 | Y | 0164 |
| 29 | Z | 0816 | 30 | N | 0071 |
| 42 | Z | 0961 | 33 | S | 0519 |
| 27 | W | 0301 | 11 | D | 0635 |
| 20 | T | 0028 | 17 | G | 0234 |
| 12 | R | 0317 | 17 | J | 0316 |
| 43 | U | 0856 | 37 | F | 0891 |
| 29 | J | 0776 | 39 | E | 0260 |
| 45 | Y | 0028 | 30 | W | 0724 |
| 04 | V | 0931 | 13 | G | 0837 |
| 42 | M | 0456 | 32 | U | 0715 |
| 04 | O | 0094 | 22 | Q | 0546 |
| 36 | E | 0769 | 23 | C | 0923 |
| 24 | H | 0966 | 06 | D | 0500 |
| 25 | T | 0018 | 09 | L | 0274 |
| 28 | O | 0108 | 32 | P | 0912 |
| 24 | A | 0243 | 44 | Y | 0318 |
| 01 | X | 0651 | 11 | X | 0389 |
| 36 | G | 0892 | 27 | Q | 0383 |
| 24 | J | 0078 | 22 | H | 0848 |
| 22 | V | 0355 | 38 | B | 0736 |
| 38 | Q | 0345 | 07 | B | 0137 |
| 30 | W | 0131 | 14 | C | 0331 |
| 38 | N | 0961 | 29 | H | 0200 |
| 09 | R | 0201 | 35 | X | 0202 |
| 05 | F | 0161 | 07 | M | 0471 |
| 27 | P | 0561 | 40 | Y | 0306 |
| 24 | T | 0580 | 22 | Q | 0722 |
| 09 | L | 0976 | 31 | R | 0821 |
| 02 | H | 0643 | 21 | Y | 0318 |
| 11 | A | 0096 | 20 | M | 0389 |
| 22 | O | 0046 | 48 | D | 0143 |
| 27 | D | 0592 | 08 | T | 0980 |
| 33 | E | 0747 | 27 | Z | 0341 |
| 08 | S | 0695 | 19 | P | 0726 |
| 04 | F | 0988 | 18 | B | 0738 |
| 37 | P | 0259 | 36 | E | 0290 |
| 11 | S | 0224 | 30 | B | 0480 |
| 32 | D | 0686 | 38 | H | 0159 |
| 22 | L | 0977 | 14 | Q | 0438 |
| 33 | E | 0924 | 08 | M | 0093 |
| 23 | G | 0273 | 20 | U | 0184 |
| 24 | F | 0773 | 27 | F | 0426 |
| 23 | O | 0822 | 11 | L | 0103 |
| 05 | X | 0350 | 09 | D | 0002 |

[இவை உறுதிப் படுத்தப்பட வேண்டும்]

### நடேசன்,...

1-ம் பக்கத் தொடர்ச்சி

யோர் மீண்டும் செனட்டர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். டாக்டர் ஆர். பி. லெனேரா, திரு. டி. எல். எப். பீட்ரிஸ் ஆகியோரும் புதிய செனட்டர்களாக நியமிக்கப்பட்டனர்.

## 2 மாத சிறை

சாவகச்சேரி, வியா.

வரணி வடக்கு வாசியான கந்தவனம் பெண் வள்ளிப்பிள்ளையின் வீட்டை எரித்துச் சேதம் விளைவித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த தம்பு மயில்வாகனம், வேலன் சின்னர் ஆகிய இருவரும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவினால் குற்றவாளிகளாகக்காணப்பட்டு இருவருக்கும் தலா இரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# யாழ். உற்பத்தியாளருக்கு ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரை வரவேற்றனர்.

அமைச்சர் தகநாயக்கா மேலும் பேசியதாவது:

யாழ்ப்பாணத்தில் பட்டு நூல் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக நாம் அமைச்சில் திட்டமிட்டுள்ளோம். விரைவில் இங்கு ஓர் பட்டுநூல் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்படும் என்பது உறுதியாகும். அதே வேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு மின்சக்தி தறிகள் அமைக்கவும் முடிவு செய்துள்ளேன். இவைகளை அதிகமாக அடுத்த ஆண்டின் முற்பகுதியில் அமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இத்திட்டங்கள் பூரண வெற்றி பெற யாழ்ப்பாண மக்களின் பூரண ஆதரவும் எமக்குத் தேவை.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே 'லக்சல' அமைப்பதன் நோக்கமாகும். சிறு கைத்தொழிலாளர்களிடமிருந்து நீதியான விலைக்குப் பொருட்களை வாங்கி, நீதியான விலைக்கு மக்களுக்கு விற்பனை செய்வதே இதன் முக்கியமான [illegible] கடமையாகும். இங்கு அமைக்கப்படும் 'லக்சல' மூலம் யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்கள் தென்னிலங்கைக்கும், தென்னிலங்கை உற்பத்திப் பொருட்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் சுலபமாக விற்பனைக்கு எடுத்துச் செல்ல வசதியேற்பட்டுள்ளது.

புராதன காலத்திலிருந்தே மதிப்புப் பெற்ற நல்லெண்ணெயும், பனங்கட்டியும் யாழ்ப்பாண மக்களுக்கே சொந்தமானவையாகும். இவைகளை இனி தென்னிலங்கையைச் சேர்ந்த சகலரும் சுலபமாகப் பெற இந்த 'லக்சல' ஒரு பாலமாகவிருக்கும். இது ஒரு தேசத் தொண்டும் கூட எமது சகல திட்டங்களுக்கும் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்து வரும் வடபகுதி எம். பி.க்கள் தொடர்ந்து எமக்கு ஆதரவு வழங்கினால் எமது நாடு செல்வம் கொழிக்கும் நாடாகும்.

திறப்புவிழாவைத் தொடக்கி வைத்த வடபகுதிஅரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள 'லக்சல' இதுவாகும். இதன் மூலம் நமது சிறுகைத்தொழில் விற்பன்னர்கள் முன்னேறுவதுடன் தரமான பொருட்களும் உற்பத்தி செய்யப்படுவதோடு, இப்பொருட்கள் பண்டமாற்று மூலம் இலங்கையின் பல பகுதிகளுக்கும் செல்ல வசதியாகவும் இருக்கும் சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் அமைத்துள்ள இத்திட்டம் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

குடிசைக் கைத்தொழில் இலாகா டைரக்டர் திரு. சில்வா பேசுகையில், 'லக்சலா'வுக்கென அமைக்கப்பட்ட ஆலோசனைச் சபையின் திறமையிலேயே இதன் முன்னேற்றம் தங்கியுள்ளதென்றும், இன்று இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு மாதமொன்றுக்கு சுமார் 2,500ரூபா சம்பளம் வழங்கவேண்டியுள்ளது என்றும், எனவே இங்கு மாதாமாதம் சுமார் 3,000 ரூபா வரை வியாபாரம் நடைபெறவேண்டுமென்றும்தெரிவித்தார். நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனும் பேசினார். [ந. நி.]

## இடமாற்றம்

கோப்பாய், வியாழன்

கோப்பாய் தபால் நிலையத்தில் அதிபதிராக கடமையாற்றும் திரு. எஸ். அரியநாயகம் பதவியுயர்வு பெற்று அடுத்துவரும் ஜனவரி மாதம் முதல் மேற்பார்வை உத்தியோகத்தராக அனுராதபுரம் தபால் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்.

# பொது அறிவும் .....

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

### விடைகள்

1. ஹெய்லிசெலாசி (Haile Sellasie)
2. மேஜர். யூரி ககாரின் (Major Yuri Gagarin) ரஷ்ய தேசத்தவர்,
3. டாக்டர் சால்ஸ் கொடகும்பர.
4. திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
5. திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்க.
6. இங்கிலாந்து. கொன்சவேற்றிவ் (Conservative)
7. டாக்டர் சிங்மன் றீ (Dr. Syngman Rhee)
8. எயர் கொமோடர் ரேகன் அமரசேகரா.
9. லீ காவி ஒஸ்வால்ட் (Lee Harvey Oswald)
10. நட்சத்திரம்.
11. சேர். விராங்க் வொறல் (Sir Frank Worrell)
12. பெனிடோ முசோலினி (Benito Mussalini)
13. திரு. என்டுறூ வி. கொரி (Andrew V. Corry)
14. திரு. ரீ. உருத்திரா.
15. பேட்ரண்ட் றஷல் (Betrand Russell)

(அடுத்த மாதிரி வினுவிடைகள் இம்மாதம் 30-ம் திகதி வெளிவரும்.)

3-வது குதூகல வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ண [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனு - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர் நடித்த
நாம் மூவர்

REGAL JAFFNA
Daily at 4 30 9-30 p. m.
Morning Shows at 10-30a.m
Pr, Poya & Holidays
LAWRENCE of ARABIA
Passes & Concession suspended

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, 9-45 p. m.
Agent 3 S?
PASSPORT to HELL
Cinemascope-Technicolor

மனோகரா — ராணி
யாழ்ப்பாணம்
30-10-67 திகதி முதல்
ஜெய்சங்கர், ஆதித்தன், தங்கவேலு, "வெண்ணிறஆடை" மூர்த்தி, வாணிஸ்ரீ, விஜயலலிதா, பண்டரிபாய் பேபி கௌசல்யா, குமாரி ராதா நடித்த
காதல் படுத்தும் பாடு
பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
பி. சுசிலா, எஸ். ஜானகி.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org